# ,நேருக்கு நேர்' - அன்றாட வாழ்க்கையில் ஆதரவும் ஒருங்கிணைப்பும்

## பங்கேற்பாளர்களுக்கான தகவல்

| | |
|---|---|
| **சலுகை** | நேருக்கு நேர் ' திட்டத்தில் உங்களுக்கான தொடர்பு நபரை நாங்கள் தேடுகிறோம். இந்நபர் உங்களின் அன்றாட கேள்விகளுக்கு உதவுவார்,மற்றும் உங்களுக்கு பாசல் நகரை (Basel) காண்பிப்பதுடன் உங்களுடன் ஜெர்மன்மொழியையும் (Deutsch) பேசுவார். உங்களுக்கு வீடு தேடுவதற்கு அல்லது வேலை தேடுவதற்கு மற்றும் கடிதங்களின் சாராம்சங்களை புரிந்துகொள்வதற்கும் இவை உதவும்.உங்கள் தொடர்பு நபர் ஒரு தன்னார்வத் தொண்டர் ஆவார், மற்றும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டவராகிய இவர் மக்களைத்திறம்பட புரிந்து கொள்ளவும் அவர்களுக்கு ஆதரவளிக்கவும் காத்திருக்கிறார். |
| **ஒழுங்குகள்** | - நீங்கள் இத்திட்டத்தில் சுயமாக முன்வந்து பங்கேற்கிறீர்கள்<br>- நீங்கள் எந்தத் தொடர்பு நபரைச் சந்திக்கிறீர்கள் என்பதை நீங்களே முடிவு செய்வீர்கள்.<br>- நீங்கள் வாரந்தோறும் அல்லது ஒவ்வொரு 14 நாட்களுக்கும் 1-2 மணிநேரம் வரை தொடர்பு நபரை சந்திக்கிறீர்கள்.<br>- ஓர் சந்திப்புக்கான நாள் அல்லது நேரம் பொருத்தமானதாக இல்லை என்றால், குறைந்தது ஒரு நாள் முன்னதாக உங்கள் தொடர்பு நபரைத் தொடர்பு கொள்ளவும்.<br>- உங்கள் தொடர்புநபரை புகைப்படம் அல்லது வீடியோ எடுப்பதற்கு முன் அனுமதி கேட்கவும். மேலும் அதை சமூகவலைத்தளங்களில் பகிர முன் மீண்டும் அனுமதி கேட்கவும். (WhatsApp, Facebook, ...)<br>- செஞ்சிலுவைச் சங்கத்தால் பணம் கொடுக்கப்படவில்லையெனில் , தொடர்புநபரிடம் பணம் கேட்காதீர்கள்.<br>- நீங்கள் சந்திப்புகளை தவிர்க்க விரும்பினால், செஞ்சிலுவைச் சங்கத்தில் உள்ள பொறுப்பான ஊழியரைத் தொடர்பு கொள்ளவும். |
| **செயல்முறை** | - தொடர்பு நபருடனான ஆரம்ப சந்திப்பு செஞ்சிலுவைச் சங்க ஊழியர் முன்னிலையில் செஞ்சிலுவைச் சங்கத்தில் நடைபெறும்.<br>- ஆரம்பத்தின் சந்திப்புகளிலில் மூன்று முதல் நான்கு சந்திப்புகள் தகுதிகாண் சந்திப்புகளாக கருதப்படுகின்றன. செஞ்சிலுவைச் சங்க ஊழியர் உங்களைத் தொடர்பு கொண்டு, சந்திப்புகளின் |

| | |
|---|---|
| | விபரங்களை கேட்டறிவார்.(பயனுள்ளசந்திப்பு / பயனற்றசந்திப்பு )<br>- சந்திப்புகள் நடைபெறும் இடம் மற்றும் நேரம் குறிப்பிடப்படாமல் இணைந்து தீர்மானிக்கப்படும் .<br>- ஒரு தொடர்பு குறைந்தது 6 மாதங்கள் வரை நீடிக்கும். |
| **செலவு** | இச்சலுகை உங்களுக்கு இலவசமாகவே உள்ளது, ஆனால் தொடர்புள்ள நபர்களுக்கிடையே பணச் செலவு ஏற்படும் போது, அவர்கள் இருவரும் பங்கு செலுத்த வேண்டும். (எ.கா:தேநீர்) |
| **தொடர்பு** | நீங்கள் வாட்ஸ்அப் (WhatsApp) மூலம் செஞ்சிலுவை சங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருப்பின் இந்த இலக்கத்தினூடாக 078 410 35 85 தொடர்புகொள்ளலாம். உங்களுக்கு உத்தமமான தகவல்கள், இலவச நுழைவுச்சீட்டுகள் (Tickets ) மற்றும் நிகழ்வு விவரங்களை அனுப்புகிறோம். ஆனால், நீங்கள் இவ்வாறான செய்திகளைப் பெற விரும்பாதேனில், எந்நேரத்திலும் அதை விடுவித்துக் கொள்ளலாம். |